DINAMALAR-28-NOV-2014

'தூய்மை இந்தியா' திட்டத்தின் கீழ் கோவை அடுத்த செம்மேடு காந்தி காலனி பகுதியில், ஈஷா யோகா சார்பில், குப்பை அகற்றும் பணியில் ஈடுபட்ட வெளிநாட்டினர்.

'தூய்மை இந்தியா' திட்டம் ஈஷா தொண்டர்கள் ஈடுபாடு

கோவை ● நவ. 28–

கோவை ஈஷா யோகா சார்பில், செம்மேடு அருகில் தூய்மைப் பணி மேற்கொள்ளப்பட்டது.

பிரதமர் மோடியால் துவங்கப்பட்ட 'தூய்மை இந்தியா' திட்டத்தை முன்னிட்டு, ஈஷா யோகா ஆசிரமவாசிகள் மற்றும் தன்னார்வ தொண்டர்கள் இணைந்து, செம்மேடு அருகில் உள்ள காந்தி காலனி கிராமம் மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளை தூய்மை செய்யும் பணியில் ஈடுபட்டனர். சுற்றுப்புறத்தை தூய்மையாக வைத்துக் கொள்வது குறித்து, விழிப்புணர்வு பிரசாரத்திலும் ஈடுபட்டனர்.

பிளாஸ்டிக் குப்பைகள் அகற்றப்பட்டு, வீடுகள் தோறும் அனைவருக்கும் இலவசமாக நைலான் பைகள் வழங்கப்பட்டன. பிளாஸ்டிக் குப்பைகளை இதில் சேகரிக்க அறிவுறுத்தப்பட்டனர்.